நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper | பக்கங்கள் 04 | விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | மக்கள் தினசரி | Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | கார்த்திகை 10 | (25-11-93) | வியாழக்கிழமை | ஓசை 280

## மாணவன் அதிவிசேட சித்திபெறின் ஆசிரியருக்கு சம்பளஉயர்வு

கல்விப் பொதுத்தராதர பரீட்சைகளில் அதிவிசேடசித்தியை மாணவர்கள் பெறின் கற்பித்த ஆசிரியருக்கு சம்பளஉயர்வு வழங்கப்படவுள்ளதாக கல்வி கலாசார அமைச்சர் டபிள்யு. ஜே. எம். லொக்குபண்டார தெரிவித்துள்ளார். பலாங்கொட மத்திய கல்லூரியின் 50ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோது மேற்கண்டவாறு தெரிவித்த அவர், இது பற்றி விளக்குகையில் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் மாணவர் ஒருவர் அதிவிசேட சித்தியைப் பெறின் அம் மாணவன் என்ன பாடத்திற்கு அதிவிசேட சித்தி பெற்றாரோ அதனைக் கற்பித்த ஆசிரியருக்கு ஒரு சம்பள உயர்வும் க. பொ. த. உயர்தரப்பரீட்சையில் (4ஆம் பக்கம் பார்க்க)


# பூநகரி முகாமில் நடந்ததென்ன?

# தற்பொழுது எதுவும் கூறமுடியாது!

## இராணுவத் தளபதி சிசில் வைத்தியரெட்னா

(கொழும்பு)

**பூநகரி படைத்தளத்தில் நடந்தது என்ன என்று தற்பொழுது கூற முடியாது. இத்தளத்தின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின் போது முகாமைவிட்டு வெளியேறிப் பதுங்கு குழிகளிலும், சிறு காடுகளிலும் ஒளிந்திருந்தஇராணுவத்தினரின் வாக்கு மூலங்கள் பூரணமாகப் பெறப்பட்ட பின்னரே பூநகரி முகாமில் நடந்ததென்னஎன்பது தெளிவாகத் தெரியவரும் என இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா 'லங்கா தீப' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.**



மேலும் அவர் கூறுகையில் ''இவர்கள் வாக்குமூலங்களைக் கொண்டே இறுதி முடிவு எடுக்கப்படும். ஆனால் இம்முடிவுகளையெல்லாம் பத்திரிகைகளில் வெளியிட முடியாது.''

''இராணுவ செய்திகளை வெளியிடும்போது மிகுந்த அவதானத்துடன் நடந்து கொள்ளவேண்டும் இராணுவத்தினரிடையே ஒருவித பதற்றத்தை ஏற்படுத்தும் விதத்தில் செய்திகளை-கருத்துக்களை வெளியிடல் தவிர்க்கப்படவேண்டும்'' என்றார்.

தாக்குதல் குறித்து கருத்து வெளியிட்ட அவர் 'விடுதலைப் புலிகள் ராணுவச் சீருடையை ஒத்த உடைகளை அணிந்திருந்தமையால் இராணுவத்தினருக்கு அவர்களை அடையாளம் காணமுடியாமல் போய் விட்டது. இதனைத் தொடர்ந்தே பூநகரி தாக்குதலின் போது முகாம்கட்டடங்களை விட்டு வெளியேறவேண்டிய ஒருநிலைஏற்பட்டதுஎன்றார்

## பூநகரிப் படைத்தளம் தாக்கப்படலாம்

# புலனாய்வு அறிக்கைகள் கிடைத்தும் பாதுகாக்க முடியாமல் போனது ஏன்?

## எறிகணை வீச்சு

(சுன்னாகம்)

அளவெட்டிப் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் அளவெட்டி வடக்குப் பகுதிகளை நோக்கி பலத்த எறிகணைத் தாக்குதல்களை நேற்று முன் தினம் இரவு நடாத்தினர் பரவலாக துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

(11)

# மாவீரர் தினத்தையொட்டி உசார் நிலையில் படைகள்!

## கொழும்பிலும் ஏற்பாடுகள் தீவிரம்

(கொழும்பு)

மாவீரர்வாரத்தையொட்டி கொழும்பில் கடும்பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இக்காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் தாக்குதல் எதுவும் நடத்தலாம் என்ற அச்சம் காரணமாகவே தலைநகரில் இவ்வாறு பாதுகாப்பு நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது

கொழும்பில் கடந்த சில தினங்களாக படையினரின் கெடுபிடிகள் மீண்டும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வீதிகளிலும், விடுதிகளிலும் பொலிசாரின் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை வடக்கு கிழக்குப் பகுதி•ளிலும், எல்லைப் பகுதிகளிலும் உள்ள பாதுகாப்புப் படையினரின் முகாம்கள் மீது தாக்குதல் ஏதும் நடைபெறலாம் என்ற காரணத்தினால் அவை உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகக் கொழும்பில் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஐ ஐ தே மு உறுப்பினர் சுதந்திரக்கட்சியில் இணைவு

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் முக்கியஸ்தரும் ஊவா மாகாண சபையின் உறுப்பினருமான சமரவீர வீரவன்னி தனது கட்சி உறுப்பினர் பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளார்.

இவர் ஐக்கிய தேசிய கட்சியின் முக்கிய அமைச்சர் பதவியை வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது சுதந்திரக் கட்சியுடன் இணைந்து இருப்பதாகவும் சுதந்திரக் கட்சியின் தியலும தேர்தல் தொகுதியின் பிரதான அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சென்ற மாகாண சபை தேர்தலை தொடர்ந்து ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைமைப்பீடம் அரசாங்கத்துடன் இணைவதற்கு பல முயற்சிகளை (4ஆம் பக்கம் பார்க்க)

# மாவீரர் நினைவாக வலிகாமத்தில்

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்ன 'லங்கா தீப' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில் ''இவர்கள் வாக்குமூலங்களைக் கொண்டே இறுதி முடிவு எடுக்கப்படும். ஆனால் இம்முடிவுகளையெல்லாம் பத்திரிகைகளில் வெளியிட முடியாது.''

''இராணுவ செய்திகளை வெளியிடும்போது மிகுந்த அவதானத்துடன் நடந்து கொள்ளவேண்டும் இராணுவத்தினரிடையே ஒருவித பதற்றத்தை ஏற்படுத்தும் விதத்தில் செய்திகளை-கருத்துக்களை வெளியிடல் தவிர்க்கப்படவேண்டும்'' என்றார்.

தாக்குதல் குறித்து கருத்து வெளியிட்ட அவர் 'விடுதலைப் புலிகள் ராணுவச் சீருடையை ஒத்த உடைகளை அணிந்திருந்தமையால் இராணுவத்தினருக்கு அவர்களை அடையாளம் காணமுடியாமல் போய் விட்டது. இதனைத் தொடர்ந்தே பூநகரி தாக்குதலின் போது முகாம்கட்டடங்களை விட்டு வெளியேறவேண்டிய ஒருநிலைஏற்பட்டதுஎன்றார்



## பூநகரிப் படைத்தளம் தாக்கப்படலாம்

# புலனாய்வு அறிக்கைகள் கிடைத்தும் பாதுகாக்க முடியாமல் போனது ஏன்?

### விசாரணை நடத்தப்படும் என்கிறார் பிரதமர்

(கொழும்பு)

பூநகரி படைத்தளம் மீது தாக்குதலை ஆரம்பிக்க சில மணிநேரங்களுக்கு முன்னரேயே புலிகள் முகாமிற்குள் ஊடுருவிவிட்டார்களா? பூநகரி முகாமை மீட்க அப்பகுதிக்கு விசேட படையணி செல்ல 72 மணிநேரத்திற்கு மேல் எடுத்ததற்கு காரணம் என்ன? இவ்வாறான ஒரு தாக்குதலுக்கு முகம்கொடுக்கக்கூடிய அவசர ஏற்பாடுகளைக்கொண்ட திட்டமெதுவும் முன்னரே தயாரிக்கப்படாத நிலை இருந்ததா? என்னும் விடயங்கள் குறித்து இராணுவ விசாரணைக்குழு விசாரிக்க உள்ளதாக சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்

பூநகரி முகாம்மீது நடாத்தப்பட்ட தாக்குதல் குறித்து பாராளுமன்றத்தில் அவர் விடுத்த அறிக்கையில் மேற்குறிப்பிட்ட விடயங்கள் வெளியிடப்பட்டன. எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் ஒத்திவைப்புநேரத்தில் கேட்ட கேள்விக்கு பதிலளித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், தாக்குதல் நடைபெறுமென பூநகரி இராணுவ முகாமிற்கு போதிய தகவல்கள் கிடைத்திருந்தன. இந்த முகாமிற்குள் நுழைய புலிகள் திட்டமிட்டிருந்தது அவர்களின் வானொலிச் செய்திகள் மூலமும் மேலும் பல வழிகளிலும் அறியப்பட்டிருந்தன. மேலும் இத்தாக்குதல் தொடர்பாக இராணுவத்தினரும் பல அவதானிப்புக்களைப் பெற்றிருந்தனர் அம்முகாம்மீது புலிகள் பல தாக்குதல் முயற்சிகளை மேற்கொண்டு வந்திருக்கின்றனர் இவ்வளவு தடயங்களும் முகாம்மீதான தாக்குதல் குறித்து இராணுவத்தினருக்குக் கிடைத்த பின்னரே புலிகளின் தாக்குதல் நடந்திருக்கிறது.

பூநகரி தாக்குதல் தொடர்பாக ஆராய்வதற்கு விசேட விசாரணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இதில் சிரேஷ்ட இராணுவத்தினர் அடங்கியுள்ளனர். விசாரணைக்குழுவின் அறிக்கை கிடைத்த பின்னரே முகாம் நிலைபற்றி தெளிவாக அறிந்துகொள்ள முடியும்

#### மீட்புக்கு காலதாமதம் ஏன்?

பூநகரி முகாமிலிருந்த இராணுவத்தினரின் அசட்டைப் போக்கு போன்றவை விசாரணையின்போது தெரியவரலாம். பூநகரி இராணுவம் மீதான தாக்குதலின்போது விசேட மீட்பு அணி அங்கு செல்ல 72 மணிநேரம் எடுத்துள்ளது. இவ் அணி அங்கு செல்ல இவ்வளவு நேரம் எடுத்ததற்குக் காரணம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரி படைமுகாம் வீழ்ச்சி குறித்த

# பிரதமர் ரணிலின் அறிக்கையில் கேள்விக்குப் பதிலில்லை!

(லண்டன்)

பூநகரியில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் குறித்து நேற்று பிரதமர் ரணில் பாராளுமன்றத்தில் வெளியிட்ட அறிக்கை பல கேள்விகளுக்கு பதிலளிப்பதாக அமைந்திருக்கவில்லை என பி.பி.ஸி. குறிப்பிட்டது.

தெற்கில் சிங்கள மக்களிடையே பெரும் சீற்றத்தையும் குழப்பத்தையும் தந்த ஒரு விவகாரம் குறித்து பிரதமர் அரசு சார்பாக முதல் தடவையாக விளக்கமளித்திருக்கின்றார். 241 படையினர் கொல்லப்பட்டதாக பிரதமர் கூறுகிறார் ஆனால் முன்னதாக படை வட்டாரங்கள் 600க்கு மேற்பட்ட படையினர் பலியாகியோ அல்லது காணாமற்போய்விட்டனர் என கூறியிருந்தனர் என்றும் பி.பி ஸி சுட்டிக்காட்டியது. பூநகரியில் எத்தனை படையினர் இருந்தனர் என்பது தெரியாது என பிரதமர் முன்பு வெளியிட்ட அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

புலனாய்வுப் பிரிவின் எச்சரிக்கை கிடைத்தும் புலிப்படை பூநகரி முகாமை ஊடுருவி அதை கைப்பற்றியது குறித்து பிரதமரின் மனதில் உள்ள ஓர் ஆற்றாமை உணர்வை அவரது உரை வெளிப்படுத்தியதாகவும் பி.பி. ஸி குறிப்பிட்டது.

(4ஆம் பக்கம் பார்க்க)

# செயலககட்டடத்திற்குமட்டும் 81 இலட்சம் ரூபா சேதம்

(யாழ்ப்பாணம்)

சேதமடைந்த யாழ். செயலக கட்டடத்தின் பெறுமதி மட்டும் எண்பத்தொரு இலட்சம் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இம் மதிப்பீட்டுக்கு அமைய திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு யாழ்.செயலகம் நடவடிக்கை எடுத்திருப்பதாக அறியப்பட்டது.

கடந்த 12ஆம் திகதி காலை யாழ். செயலகம் மீதான சிறிலங்கா விமானப் படையின் சுப்பர் சொனிக் விமானங்கள் குண்டுத் தாக்குதல் மேற்கொண்டதில் யாழ் செயலகம் முற்றாகச் சேதமடைந்தது தெரிந்ததே.

உபகரணங்கள், தளபாடங்களைத் தவிர்த்து செயலகக்

(4ஆம் பக்கம் பார்க்க)

**மாவீரர் நாள் நவம்பர்-27**

எதிரி வருகிறான் என,
எத்தனை காலம்தான் ஓடுவது
எழுச்சி கொள்வோம்,
ஏந்திடுவோம் ஆயுதம்!

**சுன்னாகம் வர்த்தக சங்கம்.**

(சி-7972)

(கொழும்பு)

மாவீரர்வாரத்தையொட்டி கொழும்பில் கடும்பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இக்காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் தாக்குதல் எதுவும் நடத்தலாம் என்ற அச்சம் காரணமாகவே தலைநகரில் இவ்வாறு பாதுகாப்பு நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது

கொழும்பில் கடந்த சில தினங்களாக படையினரின் கெடுபிடிகள் மீண்டும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வீதிகளிலும், விடுதிகளிலும் பொலிசாரின் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை வடக்கு கிழக்குப் பகுதிகளிலும், எல்லைப் பகுதிகளிலும் உள்ள பாதுகாப்புப் படையினரின் முகாம்கள் மீது தாக்குதல் ஏதும் நடைபெறலாம் என்ற காரணத்தினால் அவை உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகக் கொழும்பில் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

# ஐ ஐ தே மு உறுப்பினர் சுதந்திரக்கட்சியில் இணைவு

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் முக்கியஸ்தரும் ஊவா மாகாண சபையின் உறுப்பினருமான சமரவீர வீரவன்னி தனது கட்சி உறுப்பினர் பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளார்.

இவர் ஐக்கிய தேசிய கட்சியின் முக்கிய அமைச்சர் பதவியை வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது சுதந்திரக் கட்சியுடன் இணைந்து இருப்பதாகவும் சுதந்திரக் கட்சியின் தியலுமதேர்தல் தொகுதியின் பிரதான அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சென்ற மாகாண சபை தேர்தலை தொடர்ந்து ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைமைப்பீடம் அரசாங்கத்துடன் இணைவதற்கு பல முயற்சிகளை

(4ஆம் பக்கம் பார்க்க)

# மாவீரர் நினைவாக வலிகாமத்தில் எழுச்சிகர ஏற்பாடுகள்

வலிகாமம் எங்கும் மாவீரர் வாரம் தொடர்பாக எழுச்சிகர ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன வட்டரீதியாக மாவீரர் நினைவுக் கொட்டகைகள் அமைக்கப்பட்டு மாவீரர் உருவப்படங்கள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளன.

வீதிகள் தோறும் மாவீரர் நினைவு வளைவுகளும் பதாகைகளும் காணப்படுகின்றன வீரம் செறிந்த விடுதலைப் போரில் ஆகுதியான மாவீரர்களின் வீரகாவியங்கள், தாக்குதல்கள் போன்றவற்றை சித்தரிக்கும் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

பிரமாண்டமானமுறையில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவு மண்டபங்களில் காணப்படும் பலநூற்றுக் கணக்கானமாவீரர்களின்உருவப்படங்களுக்குஇரவுபகலாக மக்கள் மலரஞ்சலி செலுத்தி வருவதை காணக்கூடியதாகவுள்ளது வலிகாமத்திற்கான கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் பல வர்ணங்களில் மின் அலங்காரம் செய்யப்பட்டுள்ளதுடன் மக்கள் அஞ்சலிக்காக திறந்துவிடப்பட்

(4ஆம் பக்கம் பார்க்க)

### வீரச்சாவு



லெப்டினன்ட் உதயன்

திருமலை மாவட்டம் மூதூர் கல்லம்பார் துறையடி எனுமிடத்தில் கடந்த 21ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகள்போராளிஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் உதயன் (சிவகுமாரசாமி நிர்மல தாஸ் - 64ஆம் கட்டை மூதூர் திருமலை) எனும் போராளிக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# மன்னார் மாவட்டத்தில் உணர்வுபூர்வ மாவீரர் விழா

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தமிழீழ மாவீரர் வாரம் வெகு சிறப்புற நடைபெற்று வருகிறது.

மாவீரர் வார ஆரம்ப நாளான கடந்த 21-ம்திகதி மடு, நானாட்டான், பள்ளமடு, முளங்காவில், அடம்பன் ஆகிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள், அரச திணைக்களங்கள், விடுதலைப் புலிகளின் பாசறைகள, செயலகங்கள், சனசமூக நிலையங்கள், மாவீரர் துயிலும் இல்லங்கள் ஆகியவற்றில் தமிழீழ தேசியக்கொடி ஏற்றலுடன் மாவீரர் வாரம் ஆரம்பமாகியது.

மன்னார் மாவட்ட மாவீரர் பணிமனையில் மாவட்ட தளபதி திரு. கதிர் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். அங்குள்ள மாவீரர் துயிலுமில்லங்களில் மாணவர்கள, ஆசிரியர்கள், தினமும் மலரஞ்சலி செலுத்திவருகின்றனர். நேற்றுமுன்தினம் முதல் சகல பிரதேசங்களிலும் வீதி திறப்பு

(4ஆம் பக்கம் பார்க்க)

**மாவீரர்களே!**

புதையுண்ட குழிபிளந்து புரட்சிப்
பூமலரும்
பொழுதொன்று இருள்கலைத்து
நமக்கென்று புலரும்
விதையுண்ட மாவீரர் விருட்சங்கள் ஆவர்
விடுதலை நிழல்தன்னை எமக்கென்றும்
ஈவர்.

## வரி விளம்பரம்


### தேவை

வெற்று எண்ணெய் பரல்களைவிற்பனைசெய்யவிரும்புவோர் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும். தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:- இல. 10, செம்பியன் லேன், கொக்குவில்

(சி-7981)



NEW ADMISSIONS FOR THE FULL-TIME DIPLOMA IN ENGLISH LANGUAGE TEACHING 1992-93

Applications are invited for the above course from non - graduate teachers of English. Applicants should be less than 50 Years of age as of 1994-01-01

Candidates should have at least a credit pass in English in G. C. E (O L), with at least 3 passes in the (A/L), and should have a minimum of five years' English Language Teaching experience. Candidates with Trained Teachers' Certficates will also be considered for admission.

The relevant application forms can be obtained from the Senior Asst. Registrar, Academic after payment of fees of Rs. 101- at the Finance Branch.

The candidates will be required to sit for a written test and will be summoned for an interview based on their performance in the written test.

Please forward the application through your Principal to Senior Asst. Registrar, Academic Bran h, University of Jaffna, Thirunelvely before 03-12-93.

Registrar,
University of Jaffna
23-11-1993.

(சி- 7987)


யா। கோண்டாவில் சி.சி.த.க பாடசாலை

எமது வித்தியாலய பழைய மாணவர் மறத்தமிழர், கர்மவீரர், மாவீரர் செல்வன் இராசப்பு உதயகுமார் (கார்த்திக்) அவர்களின்

### மாட்சிநயப்பு அரங்கு



### வீரவேங்கை கார்த்திக்
(இ. உதயகுமார்)

| மைந்தனாய் | மாவீரனாய் |
|---|---|
| 05-07-1964 | 20-12-1985 |

இடம்:- பாடசாலை மண்டபம்

க.ாலம்:- 1993-11-25 வியாழன் (இன்று) காலை 9. 00 மணி

தலைவர்:- திரு. இ. சிவபாதசேகரம் அவர்கள் அதிபர்

- மங்கள விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- மௌன அஞ்சலி
- தலைமையுரை
- மாவீரர் குடும்பத்தினர் கௌரவிக்கப் படுதல்

மாட்சி நயப்புப் பேருரையாளர்

1. திரு. செ. சத்தியமூர்த்தி J. P. அவர்கள்
2. திரு. செ. நடராஜா J. P. அவர்கள்
3 திரு. க மகேஸ் அவர்கள்
4 திரு. எம் எஸ். தயாளன் அவர்கள்
5. திரு. செ. சண்முகவடிவு அவர்கள்
6 திரு. க. ஞானசேகரம் அவர்கள்


G. A. Q. 94/95

(பேராதனைப் பல்கலைக்கழகம்)

- மேற்கூறப்பட்ட பாடநெறிக்கு A/L-ல் 3 பாடங்கள் சித்தியடைந்த (கலை, விஞ்ஞானம், வர்த்தகம்) வர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.
- இதற்கான பல்கலைக்கழகப் பதிவு எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.
- விபரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் நேரில் பெற்றுக் கொள்ளவும்.

விரிவுரைகள் ஆரம்பம்
28-12-93 11 மணி

விபரங்களுக்கு
S. அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்.

(சி-7984)


### 1-ம் ஆண்டு நினைவு



பிறப்பு
22-10-1966

வீரச்சாவு
25-11-1992

### கப்டன் சுது (சேகரன்)
(இராயப்பு அன்ரனி இராஜசேகரன்)

7ஆம் வட்டாரம் மூதூர்

அன்னை மேனி எங்கும் அந்நிய
பதிவுகள் பாதம் பதித்த வேளை
தளராத உறுதி கொண்ட தலைவனின் தானையில்
விடுதலை தாகம் கொண்ட வேங்கையாகி
மூதூரின் முத்தாய் முன்னணி வீரனாய் - திகழ்ந்த
மறவன் இவன் மைந்த புரத்தில்
கயவருடன் கடுஞ் சமர் புரிகையில்
தாயக கனவுடன் தன்னுயிரை நீர்த்து
சொந்தங்களை சோகத்தில் விட்டவன்

## நன்கொடைப் பணம் வழங்கப்படவில்லை

(தொல்புரம்)

உள்ளூராட்சி திணைக்களத்தினால் வழங்கப்பட்டு வந்த சனசமூக நிலையங்களுக்கான 1993 ஆம் ஆண்டிற்குரிய நன்கொடைப்பணம் இது வரை வழங்கப்படாமல்இடை நிறுத்தப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி மேற்படி நன்கொடைப் பணத்தினை விரைவில் வழங்கக்கோரி வலிமேற்கு பிரதேசசபை விசேட ஆணையாளர் ஊடாக சம்பந்தப்பட்ட திணைக்கள மேலதிகாரிகளுக்கு மகஜர்கள் அனுப்பப்பட்டுள்ளன.

வலிமேற்கு பிரதேசசபை சுழிபுரம் உப அலுவலகத்தைச் சேர்ந்த சனசமூக நிலையங்களின் உப சமாசத்தினர் மேற்கொண்ட இந் நடவடிக்கையில் வடக்கு, கிழக்கு மாகாணசபை உள்ளூராட்சி ஆணையாளருக்கும், யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் மகஜர்கள் அனுப்பப் பட்டுள்ளன. (41)


எமது புதிய வெளியீடு

ராஜ்பாண்டியன் - காவேரி - ராதாரவி
பாண்டியன் - சங்கர் - செந்தாமரை

'பந்தயக் குதிரைகள்'

குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி-7990)


## நினைவு கூருகின்றோம்...
## 1993.11-25

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் சுழிபுரத்தில் சுவரொட்டிஒட்டப்போகும் போது தேசவிரோதிகளினால் படுகொலை செய்யப்பட்ட,

**சிவா** (சிவசுப்பிரமணியம் சிவகுமாரன் - மூளாய் தெற்கு - யாழ்)

**சின்னச்சிவா** (கந்தையா சிவானந்தன் - டச்சு வீதி, தொல்புரம் மத்தி, சுழிபுரம் - யாழ்)

**ஈஸ்வரன்** (கந்தையா யோகீஸ்வரன் - கண்டாமை, தொல்புரம் மத்தி, சுழிபுரம் - யாழ்)

**சிவம்** (சிவசம்பு சிவராஜா - தொல்புரம் மத்தி, சுழிபுரம் - யாழ்)

**தேவன்** (விஷ்ணு தேவநாதன் - தொல்புரம் மத்தி, சுழிபுரம் - யாழ்)

**புவி** (தர்மரெட்ணம் புவீந்திரன் - தொல்புரம் மத்தி சுழிபுரம் - யாழ்)

1985ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய-

❋ **சி.சிவலோகமூர்த்தி** (கடற்கரைச்சேனை, மூதூர் - திருமலை)

1988ஆம் ஆண்டு மட்டு - நாவற்குடாவில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**உருத்தி** (சீனித்தம்பி விநாயகமூர்த்தி - நாவற்குடா குடியிருப்பு - மட்டு)

தமிழீழக் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்க்கடற்றொழிலாளி

1990ஆம் ஆண்டு மாவிட்டபுரம் பகுதியில் சிறி

ned from the Senior Asst. Registrar, Academic after payment of fees of Rs. 101- at the Finance Branch.

The candidates will be required to sit for a written test and will be summoned for an interview based on their performance in the written test.

Please forward the application through your Principal to Senior Asst. Registrar, Academic Branch, University of Jaffna, Thirunelvely before 03-12-93.

Registrar.
University of Jaffna
23-11-1993.

(சி- 7987)

NEW ADMISSIONS FOR THE FULL-TIME POST - GRADUATE DIPLOMA IN ENGLISH LANGUAGE TEACHING 1992-93

Applications are invited for the above course from Graduate teachers of English. Applicants should be less than 50 years of age as of 01-01-1994.

A graduate with English as a subject for his-her degree should have a minimum of two years' English Language teaching experience. A graduate without English as a subject should have a minimum of four years' experience.

The relevant application forms can be obtained from the Senior Asst. Registrar, Academic after payment of fees of Rs.10 - at the Finance Branch.

The Candidates will be required to sit for a written test and will be summoned for an interview based on their performance in the written test.

Please forward the application through your Principal to Senior Assistant Registrar, Academic Branch, University of Jaffna, Thirunelvely before 03-12-1993.

Registrar
University of Jaffna
23-11-1993

(சி- 7988)

மைந்தனாய் 05-07-1964 — மாவீரனாய் 20-12-1985

**இடம்:- பாடசாலை மண்டபம்**

**காலம்:- 1993-11-25 வியாழன் (இன்று) காலை 9.00 மணி**

தலைவர்:- திரு. இ. சிவபாதசேகரம் அவர்கள் அதிபர்

- மங்கள விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- மௌன அஞ்சலி
- தலைமையுரை
- மாவீரர் குடும்பத்தினர் கௌரவிக்கப் படுதல்

மாட்சி நயப்புப் பேருரையாளர்


1. திரு. செ. சத்தியமூர்த்தி J. P. அவர்கள்
2. திரு. செ. நடராஜா J. P. அவர்கள்
3 திரு. க மகேஸ் அவர்கள்
4 திரு. எம் எஸ். தயாளன் அவர்கள்
5. திரு. செ. சண்முகவடிவு அவர்கள்
6 திரு க ஞானசேகரம் அவர்கள்
7. திரு. க. ம. இராஜேந்திரம் அவர்கள்
8. திரு. க செல்வநாயகம் அவர்கள்
9. திரு வே. சண்முகராஜா அவர்கள்
10. திரு. த. மகாசிவம் அவர்கள்
11 திரு. ஆ. இதயன் அவர்கள் (மாணவர் அமைப்பு பொறுப்பாளர்)
12 திரு சி. எழிலன் அவர்கள் (மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர்)

மாட்சி நயப்புப் பேருரையை ஏற்போர் உரை
திரு. இராசப்பு

மாவீரர்குடும்பத்தவர், போராளிகள், பெற்றோர்கள் நலன் விரும்பிகள், பழைய மாணவர், பாடசாலை மாணவர் மற்றும் அனைவரும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு அன்பாய் வேண்டுகின்றோம்.

திரு. இராசப்பு குடும்பத்தினர்
பாடசாலை முகாமைத்துவக்குழு
(6694)

# 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



**S. அன்ரனி சேம்பர்லேன்**

அமரர் S அன்ரனி சேம்பர்லேன் அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிற்காக மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் 26-11-1993 நாளை (வெள்ளிக்கிழமை) காலை 6.30 மணியள வில் திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப்படும் அனைவரையும் திருப்பலிப் பூசையில் பங்குபற்றி அவருக்காக மன்றாடும்படி கேட்டுக்கொள்கிறோம்.

குடும்பத்தினர்.

மாதகல். (6693)



வீரச்சாவு
25-11-1992

**கப்டன் சுது (சேகரன்)**
**(இராயப்பு அன்ரனி இராஜசேகரன்)**
7ஆம் வட்டாரம் மூதூர்

அன்னை மேனி எங்கும் அந்நிய
பதிவுகள் பாதம் பதித்த வேளை
தளராத உறுதி கொண்ட தலைவனின் தானையில்
விடுதலை தாகம் கொண்ட வேங்கையாகி
மூதூரின் முத்தாய் முன்னணி வீரனாய் - திகழ்ந்த
மறவன் இவன் மைந்த புரத்தில்
கயவருடன் கடுஞ் சமர் புரிகையில்
தாயக கனவுடன் தன்னுயிரை நீர்த்து
சொந்தங்களை சோகத்தில் விட்டவன்

-சிறியதாய் குடும்பத்தினர்.

24, கமால் வீதி,
யாழ்ப்பாணம். (6683)

# 41-ம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 19-07-1927



மறைவு 16-10-1993

அமரர்
**வேலுப்பிள்ளை துரையப்பா**

இம் மண்ணில் நீங்கள் இனிதாக
வாழ்ந்த நாளெல்லாம்
எம் மனதில் நிறைந்திருக்கும்
எப்போதும் என்றாலும்
இப்பிரிவைத் தாளாமல்
அழுகின்றோம் அப்பா

இன்று 25-11-93இல் எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்

-மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

16115, 3ஆவது ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர். (6692)

**சிவா** (சிவசுப்பிரமணியம் சிவகுமாரன் - மூளாய் தெற்கு - யாழ்)
**சின்னச்சிவா** (கந்தையா சிவானந்தன் - டச்சு வீதி, தொல்புரம் மத்தி, சுழிபுரம் - யாழ்)
**ஈஸ்வரன்** (கந்தையா யோகீஸ்வரன் - கண்டாணை, தொல்புரம் மத்தி, சுழிபுரம் - யாழ்)
**சிவம்** (சிவசம்பு சிவராஜா - தொல்புரம் மத்தி, சுழிபுரம் - யாழ்)
**தேவன்** (விஷ்ணு தேவநாதன் - தொல்புரம் மத்தி, சுழிபுரம் - யாழ்)
**புவி** (தர்மரெட்ணம் புவீந்திரன் - தொல்புரம் மத்தி சுழிபுரம் - யாழ்)

1985ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய-
**❋ சி.சிவலோகமூர்த்தி** (கடற்கரைச்சேனை, மூதூர் - திருமலை)

1988ஆம் ஆண்டு மட்டு - நாவற்குடாவில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-
**உருத்தி** (சீனித்தம்பி விநாயகமூர்த்தி - நாவற்குடா குடியிருப்பு - மட்டு)

தமிழீழக் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்க்கடற்றொழிலாளி

1990ஆம் ஆண்டு மாவிட்டபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-
**லெப். வீனஸ்** (எதிர்வீரசிங்கம் ரவீந்திரன் - கொம்மாந்துறை - வல்வெட்டித்துறை)

காங்கேசன்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண் அடைந்திருந்து யாழ் வைத்தியசாலையில் வீரச்சாவெய்திய-
**மகாராசா** (அருமைத்துரை சிவானந்தம் - வெற்றிலைக்கேணி - வடமராட்சி கிழக்கு)

திருமலைப் பகுதியில் எமது முகாமொன்றில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த-
**லெப். ஜெயபால்** (கணபதி மாடாசாமி - பன்குளம் - திருமலை)

மட்டுநகரில் இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதலில் பலியான மட்டு - கொடுவாமடு வாசியான தமிழ்த்தொழிலாளி.

1991ஆம் ஆண்டு மன்னார், வெள்ளாங்குளம் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் நடத்திய விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட 5 தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு பலாலி - தொண்டமானாறு தொடர்காவலரண்கள் தகர்ப்பின் போது விழுப்புண் அடைந்து சிகிச்சை பெறும் போது வீரச்சாவெய்திய-
**கடற்புலி கப்டன் முரசு** (தம்பிராசா லோகிதன் - பன்குளம் - திருமலை)
**லெப். மாணிக்கதாசன்-டினெட்** (மாணிக்கவாசன் இராசுநாகேந்திரன் - வவுனியா)

மட்டு - ஆரையம்பதிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-
**தாரத்தன்-பீற்றர்** (தங்கராசா திலகராசா - மத்திய முகாம் - அம்பாறை)
**சிறீவர்மன்-சுசி** (சிவசிதம்பரம் சபானந்தகுமார் - தாமரைக்கேணி - மட்டு)

திருமலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-
**கப்டன் சேகரன்-சுது** (ராஜப்பு அன்ரனி ராஜசேகர் - மூதூர் - திருமலை)

மன்னார் - பரியாரிகண்டல் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த-
**லெப். மதி** (பாலசிங்கம் சத்தியசீலன் - நவக்கிரி, புத்தூர் - யாழ்)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

❋ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**
(சி-7986)

யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

இன்பம் மிக்க கனவாயினும் கூட, அதை வைத்து நீண்டநாள் ஓங்கிச் செழிக்க முடியாது,

-- கபென்ட்ரி பேட்மோர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 25-11-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
த. பெ. எண் - 05

## கனவு கலைந்ததால்...

சிறிலங்கா இராணுவத்திற்கும் கொழும்பிலுள்ள பத்திரிகையாளருக்கும் இடையில், பலமான முறுகல்நிலை ஒன்று உருவாகியுள்ளது. யுத்தம் பற்றிய செய்திகளை இராணுவம் மறைக்கின்றது - தர மறுக்கின்றது என இராணுவத்தின் மீதும், அரசாங்கம் மீதும் பத்திரிகைகள் குற்றம் சாட்டும் அதேவேளை, உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டு மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்துவதாகவும், இராணுவத்திற்கு அவப்பெயரைத் தேடிக் கொடுப்பதாகவும் இராணுவத் தலைமை சீற்றம் கொண்டுள்ளது. இராணுவத் தலைமையின் இச்சீற்றம், தொலைபேசியில் கொலை மிரட்டல் மற்றும் பத்திரிகையாளரின் வீட்டிற்கு மலர்வளையம் அனுப்பும் அளவிற்குச் சென்றுள்ளது.

ஆனால், சிறிலங்கா பத்திரிகையாளர் இராணுவத்தின் மீதும், இராணுவத்தினர் பத்திரிகையாளர் மீதும் கோபப்படுவதற்கும், திட்டித் தீர்ப்பதற்கும் என்ன இருக்கின்றது? ஒருவரை ஒருவர் கண்டிக்க அவர்களுக்கு என்ன தார்மீக பலம்உள்ளது?

இராணுவம் யுத்தம் பற்றிய உண்மை நிலையைத் தர மறுக்கின்றது. ஆனால், மக்களுக்கு உண்மை நிலையைத் தெளிவுபடுத்த வேண்டியது பத்திரிகைகளின் கடமை என பத்திரிகையாளர்கள் கூச்சலிடுகின்றனர். ஆனால் இதில் விரல் விட்டு எண்ணக்கூடிய சிலரைத் தவிர எந்தப் பத்திரிகையாளர் இதுவரை யுத்தத்தின் யதார்த்த நிலையை எழுதியவர்கள்?

இராணுவத் தரப்பு வழங்கும் தகவல்களை கிளிப்பிள்ளைகள் போல் ஏற்றுக்கொண்டு அதற்கு கண்ணும் காதும் வைத்து பிரசுரித்து வந்தவர்கள், இன்று மட்டும் ஏன் இராணுவம் சொல்வதை நம்ப மறுக்கின்றார்கள். அன்று கூறியவற்றைக் கேட்டுத் திருப்திப்பட்டுக் கொண்டு இராணுவத்தை ஆகா ஓகோ எனப் பாராட்டி எழுதியவர்கள் இன்றும் கூறுவதுடன் திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டும் என இராணுவத் தரப்பு எதிர்பார்ப்பதில் என்ன தவறு உள்ளது?

மக்களுக்கு யுத்த நிலையைப் புரிய வைக்க வேண்டியது பத்திரிகைகளின் கடமைதான். ஆனால், கடந்த கால யுத்த நிலையை இப்பத்திரிகைகள் மக்களுக்குத் தெளிவாகப் புரிய வைத்தனவா? இனப்பிரச்சினைக்கு

# மாவீரர்களை நினைவு கூரும் தென்மராட்சிப் பந்தல்கள்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிக் கோட்டத்தின் அனைத்து வட்டப் பிரிவுகளிலும் மாவீரர்களை நினைவு கூருவதற்காகவும், அஞ்சலி செலுத்துவதற்காகவும், வட்டவை ரீதியாக மாவீரர் எழுச்சிக் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இக்கூட்டங்களில் பெருமளவு மக்கள் திரண்டு வந்து கலந்து கொண்டு வருகின்றனர்.

பளைவட்டப்பிரிவில் மூன்று இடங்களில்மாவீரர் நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன. வட்டச் செயலகத்தினரால் அமைக்கப்பட்டிருக்கும் பிரதான நினைவுப் பந்தலில் சுமார் 64 மாவீரர்களது உருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

இவற்றைவிடபுலோப்பளை மத்தியில் பிரதாபன் சனசமூக நிலையத்தில் ஒரு மாவீரர் நினைவுப் பந்தலும் மாசார் சமுத்திரன் குடியேற்றத் திட்டத்தில் ஒரு நினைவுப் பந்தலும் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் இத்தாவில், முகமாலை, அரசங்கேணி, புலோப்பளை, பளைநகரம், வண்ணாங்கேணிச் சந்தி ஆகிய பகுதிகளிலும் பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அருகாமையிலும் மாவீரர் நினைவு வளைவுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றைவிட மேற்படி வட்டப் பிரிவில் சுமார் 14 புதிய வீதிகளுக்கு மாவீரர்களது பெயர் சூட்டப்பட்டு திறந்து வைக்கப்பட உள்ளன.

கொடிகாமம் வட்டத்தில் மூன்று பிரதான மாவீரர் நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன. கொடிகாமம் சந்தியில் அமைக்கப்பட்டிருக்கும் நினைவுப்பந்தலில் சுமார் 100 மாவீரர்களது உருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன மிருசுவிலில் அமைக்கப்பட்டிருக்கும் பந்தலில் 23 மாவீரர்களது உருவப்படங்களும், எழுதுமட்டுவாளில் அமைக்கப்பட்டிருக்கும் பந்தலில் 10 மாவீரர்களின் உருவப்படங்களும் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை விட கொடிகாமம் சந்தி, மாவீரர் துயிலும் இல்ல வீதி, கச்சாய் வீதி, மிருசுவில்சந்தி, உசன், எழுதுமட்டுவாள், புத்தூர் சந்தி, வரணி ஆகிய இடங்களில் மாவீரர் நினைவு வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றைவிட மாவீரர்களின் நினைவாகச் சுமார் 24 வீதிகளுக்கு பெயர் சூட்டப்பட்டு திறந்து வைக்கப்படவிருக்கின்றன.

சாவகச்சேரி வட்டத்தில் மூன்று நினைவுப்பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன சாவகச்சேரிநகரப்பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் நினைவுப் பந்தலில் 110 மாவீரர்களது உருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன இதேபோல கச்சாய் வீதியிலும், டச்சு வீதியிலும் ஒவ்வொரு நினைவுப் பந்தல் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் நுணாவில் சந்தி, கைதடி வைரவர் கோவிலடி யூனியன் பேக்கரியடி, நகரப் பகுதி, கச்சாய் வீதி, டச்சு வீதி, கண்டிவீதி, மடத்தடி, கனகம்புளியடிச்சந்தி, பெரும் குளம்சந்தி ஆகிய இடங்கள் உட்பட மேலும் பல பகுதிகளில் மாவீரர் நினைவு வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றைவிட மாவீரர் நினைவாக சாவகச்சேரி வட்டப் பிரிவில் சுமார் 9 வீதிகள் புனரமைத்து பெயர் சூட்டப்பட்டு திறந்து வைக்கப்படவுள்ளன. மீசாலைப் பகுதியில் மட்டும் 5 வீதிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இதைவிட சரசாலை, மட்டுவில் பகுதிகளில் 3 வீதிகளும், சங்கத்தானையில் ஒரு வீதியும் திறந்து வைக்கப்படவுள்ளன.

கைதடி வட்டப் பிரிவில் ஒரு பிரதான மாவீரர் நினைவுப் பந்தல் அமைக்கப்பட்டுள்ளது இவற்றைவிட நாவற்குழிஅன்றூஸ் கம்பனியடி, நாவற்குழி சந்தி, பனை ஆராய்ச்சி நிறுவனத்தடி, கோப் பாய்ப் பாலத்தடி, கைதடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தடி, எரிபொருள் நிலையத்தடி, கைதடிப்பாலத்தடி ஆகிய இடங்களில் மாவீரர் நினைவு வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றைவிட இரவு 7 30 மணியளவில் கைதடி தெற்கு முத்துக்குமாரசுவாமி வித்தியாலயத்தில் மாவீரர் வார எழுச்சிக் கூட்டம்ஒன்றுநடை பெற உள்ளது.

இவ்வாறு தமிழீழ மாவீரர் வாரம் தென்மராட்சிப் பகுதியெங்கும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. (க)

## பெற்றோர் கௌரவிப்பு

மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் வைபவம் இன்று யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்வில் சிறப்புரைகளும், கலைநிகழ்ச்சிகளும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### மாவீரர் நினைவாக

மாவீரர் வாரத்தை முன்னிட்டு யாழ். நாயன்மார்கட்டு சனசமூக நிலையத்தின் முன்பாக நினைவுப் பந்தல் அமைக்கப்பட்டு அதில் அறுபத்தைந்துக்கும் மேற்பட்ட மாவீரர்களின் படங்கள்வைக்கப்பட்டு இருக்கின்றது. ஒவ்வொரு மாவீரருடைய படத்திற்கும் தனித்தனியே தீபம் ஏற்றப்பட்டு வருவதுடன்,

## அணு ஆயுத திட்டத்தில் பாக். தொடர்ந்து ஈடுபடும்
### - பிரதமர் திருமதி பெனாசிர்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் தனது அணு ஆயுதத் திட்டத்தை தொடர்ந்தும் நடைமுறைப் படுத்த அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்திருக்கின்ற போதும் பாகிஸ்தான் அதனைத் தொடர்ந்தும் மேற்கொள்ளும். இவ்வாறு பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனாசிர் பூட்டோ கூறியுள்ளார்.

இஸ்லாமாபாத்தில் அமைச்சரவைக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், பிரஸ்லர் சட்டத்திருத்தம் பாகிஸ்தான் மீது தவறான விதத்தில்பயன்படுத்தப் படுவதாகவும் குற்றம் சாட்டினார். பாகிஸ்தானின் இம்முடிவைத் தொடர்ந்து அங்குள்ள கிளையை மூடிவிடுவதென சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க ஏஜென்சி (USID) முடிவு செய்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவில் பாகிஸ்தான்

## உயிர்த் தீபங்கள் ஏற்றிவைத்தோம்

தீபங்கள் ஏற்றிவைத்தோம் உயிர்த்
தீபங்கள் ஏற்றிவைத்தோம்
நாமுமை நினைந்து நள்ளிரா வேளையில்
தீபங்கள் ஏற்றிவைத்தோம்
தீயினில் நடந்து தியாகங்கள் புரிந்து
செஞ்சுடர் ஆனவரே எங்கள்
தேசத்தை மீட்கத் தேகத்தை ஈந்து
யாகங்கள் செய்தவரே
தாயினும் மேலாம் தாயகம் என்னும்
தத்துவம் சொன்னீர்களே
தமிழன்னை மானம் காத்திட நின்றே
தாங்கிய செல்வங்களே
மரணம் உங்கட்கு இல்லை இந்த
மண்ணும் உங்களை மறப்பதற்கில்லை
எரியும் சுடர்களில் எங்கும் நிறைவாய்
தெரியும் தெய்வங்கள் நீரே
பூக்களின் சிரிப்பில் பார்க்கிறோம் உங்கள்
பொன்னொளிர் சிரிப்பதனை
பூந்தென்றல் வீசிடும் வேளையில் உங்கள்
பேச்சினைக் கேட்கின்றோம்
பாக்களில் உங்கள் போர்த்திறன் கூறியே
பண்ணிசைத் தழுகின்றோம், நாம்
பார்த்திட ஓர்முறை மீண்டுவந்துங்கள்
பூமுகம் காட்டிடுங்கள். புன்சிரிப்புதிர்த்திடுங்கள்
விடிகின்ற வேளை தெரியுது இங்கே
எழுந்தோடி வாருங்கள்!

- விஸ்வம் ராமண்ணா

## சோளப் பயிர்ச்செய்கை ஊக்குவிக்க நடவடிக்கை

1993/94 கால போகத்தில் சோளப்பயிர்ச்செய்கையை யாழ் மாவட்டத்தில் ஊக்குவிக்கும் முகமாக யாழ் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் முன்னோடி நடவடிக்கையாக ஒரு பரப்புக்கு மேற்பட்ட நிலத்தில் சோளப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு பயிரின் முக்கிய வளர்ச்சிக் காலத்தில் வரட்சி நிலவுமாயின் நீர்ப்பாசனம் செய்வதற்கு ஏதுவாக எரிபொருள் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஒவ்வொரு உற்பத்திக் குழுப் பிரிவிலும் முன்மாதிரிப் பயிற்சித் துண்டங்களில் சோளம் பயிரிடுவதற்கும் வீட்டுத் தோட்டங்களில் பயிரிடுவதற்கும் சுமார் 210 கிலோ கிராம் சோளம் விதை இலவசமாக வழங்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அத்தோடு வதிவிட வேளாண்மைப் போட்டியில் பங்கு பற்றுபவர்களுக்கு சோளம் விதை இலவசமாக விநியோகிக்கப்பட்டு வருகிறது. யாழ் மாவட்டத்தில் சோளப்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள அனைவரிடமிருந்தும் அவர்களால் விளைவிக்கப்படுகின்ற சோளம் முழுவதையும் அன்றைய சந்தை விலையின் படி கொள்வனவு செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

## மாவீரர் உருவப்படங்கள் மேலும் வெளிவந்துள்ளன

ஆ க. வெ. நடவடிக்கையின் போது தற்கொடையாளர்களான பின்வரும் மாவீரர்கள் உருவப்படங்கள் அண்மையில் வெளிவந்துள்ளன.

தார்மீக பலம்உள்ளது?

இராணுவம் யுத்தம் பற்றிய உண்மை நிலையைத் தர மறுக்கின்றது. ஆனால், மக்களுக்கு உண்மை நிலையைத் தெளிவுபடுத்த வேண்டியது பத்திரிகைகளின் கடமை என பத்திரிகையாளர்கள் கூச்சலிடுகின்றனர். ஆனால் இதில் விரல் விட்டு எண்ணக்கூடிய சிலரைத் தவிர எந்தப் பத்திரிகையாளர் இதுவரை யுத்தத்தின் யதார்த்த நிலையை எழுதியவர்கள்?

இராணுவத் தரப்பு வழங்கும் தகவல்களை கிளிப்பிள்ளைகள் போல் ஏற்றுக்கொண்டு அதற்கு கண்ணும் காதும் வைத்து பிரசுரித்து வந்தவர்கள், இன்று மட்டும் ஏன் இராணுவம் சொல்வதை நம்ப மறுக்கின்றார்கள். அன்று கூறியவற்றைக் கேட்டுத் திருப்திப்பட்டுக் கொண்டு இராணுவத்தை ஆகா ஓகோ எனப் பாராட்டி எழுதியவர்கள் இன்றும் கூறுவதுடன் திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டும் என இராணுவத் தரப்பு எதிர்பார்ப்பதில் என்ன தவறு உள்ளது?

மக்களுக்கு யுத்த நிலையைப் புரிய வைக்க வேண்டியது பத்திரிகைகளின் கடமைதான். ஆனால், கடந்த கால யுத்த நிலையை இப்பத்திரிகைகள் மக்களுக்குத் தெளிவாகப் புரிய வைத்தனவா? இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகாது என்பதையும், இராணுவம் சந்தித்துவரும் நெருக்கடிகளையும் இவர்கள் முன்பு ஏன் சிங்கள மக்களுக்குக் கூறவில்லை? இராணுவம்வெற்றி மேல் வெற்றி பெற்று வருவதாகவும், யாழ்ப்பாணத்தை விரைவில் கைப்பற்றி விடுவார்கள் எனவும் எழுதி வந்த பத்திரிகைகள் யதார்த்தத்தைச் சரியாகப் புரிந்து கொண்டா இதனை எழுதினார்கள்?

இவ்வாறு கடந்த காலம் முழுவதும் யதார்த்தத்திற்குப் புறம்பாகவும், மக்களை யுத்தத்தில் வெற்றி பெற்று விடலாம் என்ற மாயையிலும் வைத்திருக்க முனைந்தவர்கள் தற்பொழுது மட்டும் ஏன் இவ்வாறு கொதித்துப் போயுள்ளனர். அவ்வாறானால், இத்தோல்வியின் பின்னராவது இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணமுடியாது என்பதை சிங்கள மக்கள் மத்தியில் வற்புறுத்த முனைகின்றனரா? அதாவது, அரசியல் தீர்வின் அவசியத்தை வலியுறுத்த முற்படுகின்றனரா? அவ்வாறானால், இதுவரையில் பூநகரி தாக்குதலின் பின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுமாறு எத்தனை பத்திரிகைகள் வற்புறுத்தியுள்ளன.

அதுதான் இல்லை. அவற்றின் நோக்கம் வேறு இராணுவத்தின் இழப்பை வெளிக்காட்டி, சிங்கள மக்களுக்கு உணர்ச்சியை ஊட்டி, தமிழருக்கு எதிரான வன்முறையைக் கட்டவிழ்த்து விடுவதே இப்பத்திரிகைகளின் நோக்கமாகவும், அத்தோடு, தோல்விக்குக் காரணமான இராணுவத் தலைமையைத் திட்டித் தீர்த்துக் கொள்வதும், இராணுவ வெற்றிக்கு அரசு முனைவது போதாது எனக் குற்றம் சாட்டுவதுமே அவர்களின் நோக்கமாகும்.

ஆனால், பத்திரிகைகளின் குற்றச்சாட்டுக்களில் அர்த்தமில்லாதது போன்றே இராணுவத் தளபதிகள் ஆத்திரம் கொள்வதிலும், மிரட்டுவதிலும் நியாயம் ஏதும் இருப்பதாகவில்லை. முன்னர் இராணுவம் துரும்பளவு சாதித்ததை மலையளவு சாதித்ததெனக் கூறிப் பத்திரிகைகள் பாராட்டியபோது பெருமைப்பட்டுக் கொண்ட இராணுவத் தளபதிகள் தற்பொழுது தோற்றுப் போனதைக் கூறும்போது ஏற்றுக் கொள்ள வேண்டியது தானே,

ஆனால், உண்மையில் இவ்இருதரப்பிலும் ஒருவரில் ஒருவர் ஆத்திரம் கொள்வதற்குக் காரணம் பரஸ்பரம் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அல்ல. இவ் இரு தரப்பாரின் 'இராணுவ வெற்றி' என்ற கனவு கலைந்தமை இதற்குக் காரணமாகும். இதில் கற்பனையைக் கலைத்த இராணுவத்தினர் மீது பத்திரிகைகளுக்குக் கோபம். கனவு கலைந்த விடயத்தை மக்களுக்குக் கூறி தம்மை அவமானப்படுத்தியதாக இராணுவத்திற்குக் கோபம். இதுவே நிஜம்-

மூன்று பிரதான மாவீரர் நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன. கொடிகாமம் ...கிகளில் மாவீரர் நினைவு வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

# அணு ஆயுத திட்டத்தில் பாக். தொடர்ந்து ஈடுபடும்

## - பிரதமர் திருமதி பெனாசிர்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் தனது அணு ஆயுதத் திட்டத்தை தொடர்ந்தும் நடைமுறைப் படுத்த அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்திருக்கின்ற போதும் பாகிஸ்தான் அதனைத் தொடர்ந்தும் மேற்கொள்ளும். இவ்வாறு பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனாசிர் பூட்டோ கூறியுள்ளார்.

இஸ்லாமாபாத்தில் அமைச்சரவைக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், பிரஸ்லர் சட்டத்திருத்தம் பாகிஸ்தான் மீது தவறான விதத்தில்பயன்படுத்தப் படுவதாகவும் குற்றம் சாட்டினார். பாகிஸ்தானின் இம்முடிவைத் தொடர்ந்து அங்குள்ள கிளையை மூடிவிடுவதென சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க ஏஜென்சி (USID) முடிவு செய்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவில் பாகிஸ்தான் உளவு அமைப்புக்கள்

## - சவான் குற்றச்சாட்டு

(டில்லி)

பாகிஸ்தானின் சர்வதேச உளவு ஸ்தாபனம் இந்தியாவில் பிரிவினை நடவடிக்கைகளை தூண்டி வருவதாக இந்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் குற்றம் சாட்டியுள்ளார்.

ஆந்திர பிரதேசத்தில் பகவான் சத்தியசாயிபாபா பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு வைபவத்தில் கலந்து கொண்ட அமைச்சர் பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசினார்

அப்போது மேலும் கூறுகையில்,காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்க மாநில அரசியல் தலைவர்கள் போதிய முன்முயற்சி எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

# தமிழகத்தில் பெருமழை 107பேர் பலி:பயிர்கள் அழிவு

(சென்னை)

தமிழ்நாட்டில் மழை வெள்ளத்தின் காரணமாக 107 பேர் பலியாகி இருப்பதாகவும், சுமார்47பேர் வரையில் காணாமல் போயிருப்பதாகவும் தமிழ்நாடு அரசின் வருவாய் மற்றும் நிர்வாகத்துறையின் சிறப்பு ஆணையாளர் சி. என். ராம்தாஸ் கூறியுள்ளார். மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில்; இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்தவர்களுக்கு சுமார் 6 கோடிரூபா வரையில் உதவித்தொகை வழங்கப்பட்டிருப்பதாகவும், மாநிலத்தின் மொத்தசேதார மதிப்பீடு 366 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் 20,000 ஹெக்டேயர் நெற்பயிரும், 2000 ஹெக்டேயர் நிலக்கடலையும், 1900 ஹெக்டேயர் பருத்திப் பயிர்களும் பாதிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

## வடகொரியா மேற்கொண்டுள்ள

# அணு ஆயுத திட்டத்தை கைவிடவைக்க முயற்சி

(வாஷிங்டன்)

வடகொரியாவின் அணு ஆயுதத் திட்டத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக அந்த நாட்டுடன் பல தரப்பட்ட விடயங்கள் குறித்துப் பேச்சு நடத்துவதற்கு அமெரிக்க அதிபர் பில்கிளிண்டன் முன்வந்துள்ளார். வாஷிங்டனில் தென்கொரிய அதிபருடன் இணைந்து நடத்திய செய்தியாளர் மாநாட்டில்பேசிய பில்கிளிண்டன் மேலும் கூறுகையில்;

வடகொரியா தனது அணு ஆயுதங்களை விட்டொழித்து சர்வதேசஅணுவாயுத தடுப்பு ஒப்பந்தத்தில் தனக்குள்ள கடமைப் பொறுப்பை நிறைவேற்றினால் அணு ஆயுதப் பிரச்சினை ஒரேயடியாகத் தீர்ந்துவிடும் எனவும் குறிப்பிட்டார்.

களைக் கௌரவிக்கும் வைபவம் இன்று யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்வில் சிறப்புரைகளும், கலைநிகழ்ச்சிகளும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### மாவீரர் நினைவாக

மாவீரர் வாரத்தை முன்னிட்டு யாழ். நாயன்மார்கட்டு சனசமூக நிலையத்தின் முன்பாக நினைவுப் பந்தல் அமைக்கப்பட்டு அதில் அறுபத்தைந்துக்கும் மேற்பட்ட மாவீரர்களின் படங்கள்வைக்கப்பட்டு இருக்கின்றது. ஒவ்வொரு மாவீரருடைய படத்திற்கும் தனித்தனியே தீபம் ஏற்றப்பட்டு வருவதுடன், தினமும் காலையில் இக்கிராம மக்கள் மாவீரருடைய படங்களுக்கு மலர் மாலை சூட்டியும்மலரஞ்சலி செய்தும் வருகின்றனர். இரவு நேரத்திலும் பார்வையிட வசதியாக மின் ஒளி வசதியும் செய்யப்பட்டு இருக்கிறது.

ஃ ஃ ஃ

வலிகாமம் கிழக்கு கடற்புலிகளின் சார்பாக குருநகரில் மாவீரர் நினைவுப்பந்தல் அமைக்கப்பட்டுள்ளது. அதில் மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு அவ்வுருவப்படங்களுக்கு மலர் மாலைகள்அணிவிக்கப்பட்டு, ஈகைச்சுடரும் ஏற்றி வைக்கப்பட்டுள்ளது.

### ஏணிப்படி வெளியீடு

யாழ். உரும்பராய் இந்துக் கல்லூரி மாணவர்களால் உருவாக்கப்படும் 'ஏணிப்படி' என்னும் கலை இலக்கிய முத்திங்கள் இதழ் மாவீரர் நாள் சிறப்பிதழாக இன்று வெளியிடப்படவுள்ளது உரும்பராய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் கொத்தணி அதிபர் பாலசுப்பிரமணியம்தலைமையில் இவ்வெளியீட்டு வைபவம் நடைபெறவுள்ளது.

# கிணற்றில் வீழ்ந்து சிறுமி மரணம்

தென்மராட்சி எழுதுமட்டுவாள் பகுதியில் 10 வயது சிறுமி ஒருவர் தவறுதலாக கிணற்றுக்குள் விழுந்து தண்ணீரில் மூழ்கி மரணமானார்.

இச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது; எழுதுமட்டுவாள் சிவன் கோவிலடியைச் சேர்ந்த பா. ஜனனி (வயது 10) என்னும் சிறுமி பெற்றோர் வீட்டில் இல்லாத நேரத்தில் கிணற்றில் தண்ணீர் எடுக்கச் சென்றபோது தவறுதலாகவிழுந்து சாவகச்சேரி மருத்துவ மனைக்கு கொண்டுவரும் வழியிலேயே மரணமானார். (86)

வடிக்கையாக ஒரு பரப்புக்கு மேற்பட்ட நிலத்தில் சோளப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு பயிரின் முக்கிய வளர்ச்சிக் காலத்தில் வரட்சி நிலவுமாயின் நீர்ப்பாசனம் செய்வதற்கு ஏதுவாக எரிபொருள் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஒவ்வொரு உற்பத்திக் குழுப் பிரிவிலும் முன்மாதிரிப் பயிற்சித் துண்டங்களில் சோளம் பயி... சோளம் விதை இலவசமாக விநியோகிக்கப்பட்டு வருகிறது. யாழ் மாவட்டத்தில் சோளப்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள அனைவரிடமிருந்தும் அவர்களால் விளைவிக்கப்படுகின்ற சோளம் முழுவதையும் அன்றைய சந்தை விலையின் படி கொள்வனவு செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

# மாவீரர் உருவப்படங்கள் மேலும் வெளிவந்துள்ளன

ஆ க. வெ. நடவடிக்கையின் போது தற்கொடையாளர்களான பின்வரும் மாவீரர்கள் உருவப்படங்கள் அண்மையில் வெளிவந்துள்ளன.

01. வீ வே. ஆதித்தன் இராமசாமி மகேந்திரன் மட்டு.
02. ,, விஜித்திரா புஸ்பராணி செல்லையா கிளிநொச்சி.
03. ,, சித்திரன் சிவசுந்தரலிங்கம் சிவகாந்தன் வவுனியா,
04. ,, நிவேதா சிவச்செல்வி சிவபாதம் திருமலை.
05. ,, கரிகரன் சதாசிவம் தர்மலிங்கம் மானிப்பாய்.
06. ,, நிசாந்தன் இளையதம்பி பிறேமசிறி நல்லூர்.
07. ,, குழந்தை செல்வராசா இராசகோபால் மட்டக்களப்பு.
08, ,, நிமல் தனிநாயகம் சதீஸ்குமார் எழுவைதீவு-03.
09. ,, சந்திரநாயகி சிவமலர் வடிவேலு பளை.
10. ,, நீலன் இராமகிருஷ்ணன் இராஜ்குமார் திருமலை.
11. ,, ராணி கமலேஸ்வரி ஐயாசாமி மணலாறு.
12. ,, திகில் தங்கையா சேரன் கிளிநொச்சி.
13. ,, அந்தோனி தம்பிப்பிள்ளை சிவகுமார் மட்டக்களப்பு.
14. ,, சிவா சிவராசா ஜெகதீஸ்வரன் தெல்லிப்பழை.
15. ,, சேகரன் கணபதிப்பிள்ளை இராசநாயகம் மட்டக்களப்பு
16 ,, அலிஸ்ரன் தியாகராசா கிருஷ்ணபாலன் அம்பாறை.
17. ,, இருதயராஜ் லோறன்ஸ் ஜோர்ஜ் அம்பாறை.
18. ,, ஜெயராமன் சந்திரசேகர் உதயகுமார் சாவகச்சேரி.
19, 2-ம்லெப். பைரவி திருமகள் கணேசமூர்த்தி அளவெட்டி.
20. ,, எழில் சந்திரசேகரம் சசிகரன் இளவாலை.
21. ,, கிருஷ்ணா கௌரிமலர் பொன்னம்பலம் மன்னார்
22. ,, பானுமதி செல்வகுமாரி செல்வராசா மணலாறு.
23. ,, ஜஸ்மின் சத்தியமலர் சின்னத்தம்பி கொடிகாமம்.
24. லெப். பட்டெல் அழகையா சாந்தகுணம் மட்டக்களப்பு.
25, ,, நிமலேந்திரன் / பிரசன்னா தங்கவேல் செந்தில் குமரன் குருநகர்.
26. ,, நெல்சன் கோபாலர் சுந்தரரேசன் காங்கேசன் துறை.
27. ,, லலிதா இரஞ்சிதமலர் பாலசுந்தரம் திருமலை,
28. ,, காண்டேல் முத்தையா சந்திரகுமார் மன்னார்.
29. கப்டன் கோபி கந்தையா பேரின்பமூர்த்தி வேலணை.
30. ,, லக்சி தங்கராணி முத்துலிங்கம் தாளையடி.
31, ,, அமுதனி சிவமதி சிவசுப்பிரமணியம் உரும்பராய்.
32. ,, தும்பன் சின்னத்தம்பி சூரியமூர்த்தி சாவகச்சேரி.

1991 ஆம் ஆண்டு ஆ. க. வெ. நடவடிக்கையின் போது ஆனையிறவுப் பிரதேசத்தில் தம்மைத் தற்கொடையாளர்களாக்கிக் கொண்ட மாவீரர் உருவப்படங்கள் சிறு அன்பளிப்புச் செலுத்துவதன் மூலமாக, தமிழீழ மாவீரர் பணிமனை, கொக்குவிலில் 8. 30 மணிதொடக்கம் 4·30 மணிவரையான நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்று தமிழீழ மாவீரர் பணிமனை அறிவித்துள்ளது.

# மாவீரர்வாரஎழுச்சிக்கூட்டம் இன்று ஆறு இடங்களில்

(யாழ்ப்பாணம்)

வட்டரீதியாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள மாவீரர் வார எழுச்சிக் கூட்டங்கள் இன்று பின்வரும் இடங்களில் இடம் பெறவுள்ளன.

ஃ கோப்பாய் வட்டம்- கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி - இரவு 7. 30 மணி

ஃ சங்கானை வட்டம்- சங்கானை பஸ் நிலையம் முன்பாக- இரவு 7 30 மணி

ஃ கைதடி வட்டம்- கைதடி வடக்கு முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம் - இரவு 8. 00 மணி

ஃ கரவெட்டி வட்டம்- யார்க்கரு விநாயகர் வித்தியாலயம் கரவெட்டி கிழக்கு- இரவு 7. 00 மணி

ஃ தீவகக் கோட்டம்- யாழ் புகையிரத நிலையம்- இரவு 7. 30 மணி

கடற்புலிக - யாழ்மாவட்டம்

ஃ வடமராட்சி கிழக்கு வட்டம்- நாகர் கோவில் - இரவு 7. 00 மணி

## பெற்றுக்கொள்க

தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா கல்விநெறியில் பயிலும் யாழ்மாவட்ட இரு நிலையங்களையும் சேர்ந்த முதலாம் வருட இரண்டாம் வருட மாணவர்களுக்கான மொடியூல்ஸ் எதிர்வரும் 28ஆம் திகதி காலை 9. 00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில்வழங்கப்படும்.

சகல மாணவர்களும் தங்கள் தேசிய கல்வி நிறுவக அடையாள அட்டையுடன் தவறாது சமுகம்தந்து மொடியூல்ஸ்களைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துளார்,

# ராஜீவ்காந்தி கொலைவழக்கு; நளினி மீது 127 குற்றச்சாட்டு

ராஜீவ்காந்திகொலைவழக்கில் முதல் எதிரியான நளினிக்கு எதிராக 127 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. எனினும் இவற்றில் ஒன்றையேனும்தான்புரியவில்லைஎன நளினி மறுத்தார். பிரதிவாதிகள் தரப்பில் முன்வைக்கப்பட்டவாதங்களில் சாட்சிகளிடமிருந்துபெற்ற வாக்குமூலங்கள், அறிக்கைகள் எல்லாம் விசாரணைநடத்தியவர்களின் அச்சுறுத்தல், மிரட்டல் என்பவற்றிற்கு அமைவாகவே திரட்டப்பட்டது எனவும் இதை நீதிமன்று ஏற்கக்கூடாதென்றும் கோரிக்கை விடப்பட்டது.

குற்றஞ்சாட்டப்பட்ட 26 பேரும் தம்மை விடுதலை செய்ய வேண்டுமென விடுத்த கோரிக்கையை நீதிபதி சித்தீக் நிராகரித்துவிட்டார் சிறப்பு நீதிமன்ற விசாரணையிலிருந்து இவ்வழக்கு ஒழுங்குமுறையான நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்படலாம் எனவும் அவர் தீர்ப்பளித்துள்ளார்.

சாட்சியங்களின் வாக்குமூலம், பத்திரங்கள், சாட்சிப் பொருட்கள் இவற்றைக் கொண்டு குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்மீது முறையான வழக்குத் தொடுக்க போதுமான ஆதாரங்கள் உள்ளதாகவும் நீதிபதி கூறினார். எனினும் முதல் எதிரியான நளினி உட்பட 22 பேர் தாம் எந்தக் குற்றமும் புரியவில்லை என்றனர்.

சிறப்பு விசாரணையில் பதியப்பட்ட விபரங்கள் உண்மையா இல்லையா என்பது அறிவதல்ல அந்தவிபரங்களின் தரம் என்ன என்பதை மட்டுமே தாம் மதிப்பிடலாமென நீதிபதி கூறியபோது முறைப்படி ஒரு வழக்கைத் தாக்கல் செய்யப்போதிய ஆதாரங்கள் உள்ளனவா என்பதைக் கண்டறிவதே இன்றையநிலையில் தேவை என்று குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் கூறினர்.

இந்தியச் சட்டக்கோவையில் வெடிபொருள் தடைச் சட்டம், கடவுச்சீட்டுச் சட்டம், தொலைபேசி குற்றச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் இவைமூலம் 26 பேருக்கு எதிராக முறைப்படி வழக்குத் தாக்கல் செய்யலாம் என நீதிபதி கூறினார்

# மலேசியாவிசாபெறுவதற்கு 3 நிபந்தனைகள் அறிவிப்பு

(கோலாலம்பூர்)

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் பிரசைகள் மலேசியா செல்வதற்கான விஸா வழங்க மலேசிய அரசு தீர்மானித்துள்ளது. இத்தகவலை மலேசிய உள்துறை அமைச்சு நேற்று வெளியிட்டது.

மூன்று நிபந்தனைகட்கு உட்பட்டே இந்த விஸா வழங்கப்படவுள்ளது. மலேசியாவில் தங்கும் காலத்தில் செலவுக்குரிய பணம் உடையவர்களும், தடைசெய்யப்பட்ட குடியேறியவர் பட்டியலில் பெயர் இல்லாதவர்களுக்கும் மற்றும் தமது மலேசிய விஜயத்துக்கானகாரணத்தைச்சரியாகத் தெரிவிப்பவர்களுக்கே விஸா வழங்கப்படவுள்ளது.

# பாதிக்கப்பட்ட மாணவர் இன்று கலந்துரையாடல்

பாதிக்கப்பட்ட மாணவர்கள் ஒன்றியத்தினால் நேற்று நடாத்தப்படவிருந்த புதிய கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக கற்கை நெறிகள் ஆரம்பமாவதை தாமதிக்குமாறு யாழ். பல்கலைக் கழகத்தை கோருவது தொடர்பான கலந்துரையாடல் மழை காரணமாக நடைபெறவில்லை இக் கலந்துரையாடல் இன்று மாலை 3. 00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறுமென பாதிக்கப்பட்ட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது (சி)

உ

## இருபாலை கிழக்கு கேணிக்குளம்பதி

### அருள்மிகுலிங்கப்பிள்ளையார் தேவஸ்தானம்

(பழம்பிள்ளையார்)

**ஜீர்ணோர்த்தாரண அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ**

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

விநாயக அடியார்களே!

நிகழும்ஸ்ரீமுக வருஷம்கார்த்திகைத் திங்கள்11-ம்நாள் 26-11-1993 வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கும் 9-15 க்கும் இடையில் உள்ள சுபமுகூர்த்த வேளையில் லிங்கப்பிள்ளையாருக்கும் ஏனைய மூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. அத்தருணம் அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக வந்து எம்பெருமானின் திருவருளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கும்பாபிஷேக பிரதமகுரு:-

ஆகமகிரியாஜோதி, துவஜாரோகண துரந்தரர்
சிவஸ்ரீ சதா. மகாலிங்க சிவக்குருக்கள்
அரசகேசரிப்பிள்ளையார் தேவஸ்தானம் நாயன்மார்கட்டு)
ச. வைத்தியநாதன் ஐயா (ஆசிரியர்)

தர்மகர்த்தாக்கள் ஆலய பரிபாலகரும், அர்ச்சகரும்.

செ. செல்வநாதன்
தி. ஜெகதீசன்
தி. ஜெகநாதன்
திருமதி ச. புவனேஸ்வரி (6698)

## தமிழீழ மாவீரர்எழுச்சிவிழா-1993

தலைவர்: திரு. சி. தமிழ்மறவன்அவர்கள்

# பயணிகள் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பம்

திருக்கோணமலையிலிருந்து பயணிகளுக்கான கப்பல் சேவை மீண்டும் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது நேற்று 125 பயணிகளுடன் புறப்பட்ட இக் கப்பல் வாரம் இரு முறை யாழ்ப்பாணத்திற்கும் ஏனைய தீவுப் பகுதிகளுக்கும், பயணிகளை ஏற்றிச் செல்லவுள்ளது. கால நிலை மற்றும் கடல் கொந்தளிப்பு என்பவற்றின் காரணமாக கடந்த இரண்டாம் திகதி முதல் இக் கப்பல் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே.

# மட்டு-அம்பாறை தொடர்பக மாவீரர்நினைவுநிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு - அம்பாறை தொடர்பகத்தால் மாவீரர் நினைவு நிகழ்வுகள் இன்று மாலை 6. 00மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் கொண்டாடப்படவுள்ளன.

இந் நிகழ்வில் பல நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன சிறப்பு நிகழ்ச்சியாக தமிழீழ இசைக்குழுவின் இன்னிசை புரட்சிகானமும் இடம்பெறும் என மட்டு- அம்பாறை தொடர்பகத்தினர் அறிவித்துள்ளனர்.

# சம்பளப் பாக்கி இல்லை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தில் கடமையாற்றிய ஊழியர்களின் சம்பளப்பாக்கி ஒரு வருடகாலத்திற்கு மேலாகியும் வழங்கப்படவில்லை.

இச்சங்கத்தின் ஊழியர்கள் நிலவும் சூழ்நிலையைக் காரணம் காட்டி கடந்த நவம்பர் மாதம் முதல் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டது தெரிந்ததே. பலமாத சம்பளப்பாக்கியுடன், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி உட்படசுமார் ஐந்து லட்சம் ரூபாவுக்கான கொடுப்பனவுகளை இச் சங்கத்தின் நிர்வாகம் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# மிதிவெடியில் சிக்கி காலை இழந்தார்

பூநகரிப் பகுதியில் தனது வீட்டைப் பார்க்கச் சென்ற ஒருவர் மிதிவெடியில் சிக்கிக் காலை இழந்துள்ளார். கடந்த 16-ம் திகதியன்று இடம் பெற்ற இச்சம்பவத்தில் ஆறுமுகம் தாசன் என்பவரே பள்ளிக்குடாப் பகுதியில் காயமடைந்தவராவார்.

## மாவீரர்

டுள்ளது தினமும் இரவு பகலாக பெருந்திரளான மக்கள் அங்கு துயில் கொள்ளும் மாவீரர்களுக்கு மலரஞ்சலி செலுத்தி வருகின்றனர் கோப்பாயிலிருந்து திருநெல்வேலிவரை இராச வீதி மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

சனசமூக நிலையங்கள், கூட்டுறவுச்சங்கங்கள், தெங்கு பனம்பொருள் அபிவிருத்திச் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியன மாவீரர் நினைவு வளைவுகளை அமைத்துள்ளதுடன் வீதிகள் தோறும் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு காணப்படுவதுடன் மாவீரர்கள் நினைவாக விடுதலைக் கீதங்களும் இரவு பகலாக இசைக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணம் ஆரியகுளம், சங்கானைமண்டிகைக்குளம், கந்தரோடை ஆகிய பகுதிகளில் உள்ள குளங்களில் வர்ண தெப்பங்கள் மிதந்துகொண்டிருப்பதை காணக்கூடியதாகவுள்ளது.

சங்கானையில் சுமார் பதினைந்து அடி நீளமான கப்பல் ஒன்றில் கேணல் கிட்டுவின் வர்ண உருவப்படம், உறுதியின் உறைவிடம் போன்றன வைக்கப்பட்டுள்ளன. இரவு பகலாக பெருமளவு மக்கள் இதனைப் பார்வையிட்டு வருகின்றனர்

ஆரியகுளத்தில் மஞ்சள், சிவப்பு நிறவர்ணங்களால் அலங்கரிக்கப்பட்ட விளக்கு வடிவிலான தெப்பம் ஒன்று மிதந்துகொண்டிருக்கின்றது. இரவில் இத் தெப்பம் மின் ஒளி வீசிக்கொண்டிருப்பதை கொட்டும் மழையிலும் மக்கள் சாரி சாரியாக வந்து பார்வையிட்டுச் செல்கின்றனர்.

கந்தரோடையில் அலங்கரிக்கப்பட்ட கப்பல் ஒன்றில் கடலில் காவியம் படைத்த மாவீரர்களின் உருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளதுடன் தீபங்களும் ஏற்றப்பட்டுள்ளன இது பெரும்பாலானோரின் கவனத்தையும் ஈர்த்துக்கொண்டிருக்கிறது

(9,11,41)

## செயலக

கட்டடத்திற்கு மட்டும் எண்பத்தொரு இலட்சம் சேதம் ஏற்பட்டுள்ளது என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

நிர்மாணத் திணைக்களம் இவ்வாறு மதிப்பீடு செய்துள்ளது.

இத்துடன் சேதமடைந்த உபகரணங்கள், தளபாடங்களை கொண்டுவருவதற்கும், கட்டடத்தை மீளத் திருத்தி அமைப்பதற்கும் யாழ் செயலகம் நடவடிக்கை எடுத்திருப்பதாக அறியப்பட்டது.

பொது நிர்வாக அமைச்சு இதற்கான நிதியை ஒதுக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது, (தி)

## மாணவன்

குறிப்பிட்ட ஓர் பாடத்தில்

## பிரதமர்

இத்தாக்குதல் குறித்து விசாரிக்க அமைக்கப்பட்ட இராணுவ விசாரணை மன்றம் முக்கியமாக பூநகரிக்கு மேலதிகப் படைகள் வந்து சேர ஏன் மூன்று நாட்கள் பிடித்தன என்பது பற்றி விசாரிக்கும் என்றும் பிரதமர் ரணில் தன் உரையில் குறிப்பிட்டார். பூநகரி தாக்குதலும் அதனால் ஏற்பட்ட சேதம், உயிரிழப்பு தெற்கில் சிங்கள-தமிழ் மக்களிடையே முறுகல் நிலையை ஏற்படுத்தியுள்ளதுடன் இராணுவத் தளபதிகளிடமும் அளும் கட்சி

## மன்னார்

விழா சிறப்புற நடைபெறுகிறது. அனைத்து வீதிகளும் சிவப்பு, மஞ்சள் நிற வர்ணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளதுடன் மாவீரர்களை சித்தரிக்கும் ...

## புலனாய்வு

என்ன? இவ்வாறான தாக்குதலொன்றுக்கு முகம் கொடுக்கக்கூடிய வகையில் அவசரத்திட்டம் ஏதாவது தயார் படுத்தப்பட்டிருந்ததா? என்பது குறித்து விசாரணைக்குழு விசாரிக்கும்.

இராணுவ புலனாய்வுப் பணிப்பாளரினால் பூநகரி தாக்குதலுக்கு முன்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள பாதுகாப்புப்படை தலைமை ...

படையினர் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பூநகரிமீதான புலிகளின் தாக்குதலினால் இராணுவத்திற்கும், கடற்படைக்கும் பெரும் சேதம் ஏற்பட்டது.

நாகதேவன்துறை கடற்படை முகாம், பூநகரி முகாம் ஆகியவை மீது தரை, நீர்மார்க்கமாக ஒரே சமயத்தில் தாக்குதல் நடந்த விதம் குறித்து சிறிலங்கா பிரதமர் அறிக்கையில் விபரித்

லிங்கப்பிள்ளையாருக்கும் ஏனைய மூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. அத்தருணம் அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக வந்து எம்பெருமானின் திருவருளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கும்பாபிஷேக பிரதமகுரு:-

ஆகமகிரியாஜோதி, துவஜாரோகண துரந்தரர்
சிவஸ்ரீ சதா. மகாலிங்க சிவக்குருக்கள்
அரசகேசரிப்பிள்ளையார் தேவஸ்தானம் நாயன்மார்கட்டு)
ச. வைத்தியநாதன் ஐயா (ஆசிரியர்)

தர்மகர்த்தாக்கள் ஆலய பரிபாலகரும், அர்ச்சகரும்.

செ. செல்வநாதன்
தி. ஜெகதீசன்
தி. ஜெகநாதன்
திருமதி ச. புவனேஸ்வரி (6698)

---

# தமிழீழ மாவீரர்எழுச்சிவிழா-1993

தலைவர்: திரு. சி. தமிழ்மறவன்அவர்கள்
(வி. பு. மா. அ. பண்டததரிப்பு கல்விக்கோட்டம்)

பிரதம விருந்தினர்: செல்வி ஜெனா அவர்கள்
(மகளிர் படையணி சிறப்புத் தளபதி)

சிறப்பு விருந்தினர்: திரு.சி. இளம்பரிதி அவர்கள்
(யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்)

திருமதிஆ.சிவஞானசுந்தரம் அவர்கள்
(கொத்தணி அதிபர் உடுவில்)

தொடர்ந்து கலைநிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது

இடம்: யா. இராமநாதன் கல்லூரி

காலம்: 25-11-1993 வியாழக்கிழமை

நேரம்: பிற்பகல் 3-00 மணி

அன்பளிப்பு:

**மலரகம் கல்வி நிலையம்**
திருநெல்வேலி
**கீன் கல்வி நிறுவனம்**
திருநெல்வேலி

(6701) வி. பு. மா. அ. வலிகாமம்

---

## தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி

# மாவீரர் தின விழா

காலம்:- *25-11-1993* வியாழன் காலை 8-30 மணி

இடம்:- இணுவில் மத்திய கல்லூரி மண்டபம்

அனைத்து மாணவர்களையும், ஆசிரியர்களையும், மாவீரர்களினது பெற்றோர்களையும், போராளிகளையும், மற்றும் நலன்விரும்பிகள் அனைவரையும் இவ் விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உயர்தர மாணவர்கள்.
(6700) மகாஜனாக் கல்லூரி

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

---

நினைவு நிகழ்வுகள் இன்று மாலை 6.00மணிக்கு யாழ்.

### செயலக

கட்டடத்திற்கு மட்டும் எண்பத்தொரு இலட்சம் சேதம் ஏற்பட்டுள்ளது என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

நிர்மாணத் திணைக்களம் இவ்வாறு மதிப்பீடு செய்துள்ளது.

இத்துடன் சேதமடைந்த உபகரணங்கள், தளபாடங்களை கொண்டுவருவதற்கும், கட்டடத்தை மீளத் திருத்தி அமைப்பதற்கும் யாழ் செயலகம் நடவடிக்கை எடுத்திருப்பதாக அறியப்பட்டது.

பொது நிர்வாக அமைச்சு இதற்கான நிதியை ஒதுக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது, (தி)

### மாணவன்

குறிப்பிட்ட ஓர் பாடத்தில் மாணவன்ஒருவர் அதிவிசேட சித்தியைப் பெறின் அப் பாடத்தை கற்பித்த ஆசிரியருக்கு இரண்டு சம்பள உயர்வும் வழங்குவதுகுறித்து தாம் திட்டமிட்டுவருவதாக லொக்குபண்டார தெரிவித்தார்.

ஆசிரியர்களை கற்பித்தலில் ஊக்குவிப்பதே தனது இத் திட்டத்தின் நோக்கம்எனவும் அவர் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் பல நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன சிறப்பு நிகழ்ச்சியாக தமிழீழ இசைக்குழுவின் இன்னிசை புரட்சிகானமும் இடம்பெறும் என மட்டு-அம்பாறை தொடர்பகத்தினர் அறிவித்துள்ளனர்.

### பிரதமர்

இத்தாக்குதல் குறித்து விசாரிக்க அமைக்கப்பட்ட இராணுவ விசாரணை மன்றம் முக்கியமாக பூநகரிக்கு மேலதிகப் படைகள் வந்து சேர ஏன் மூன்று நாட்கள் பிடித்தன என்பது பற்றி விசாரிக்கும் என்றும் பிரதமர் ரணில் தன் உரையில் குறிப்பிட்டார். பூநகரி தாக்குதலும் அதனால் ஏற்பட்ட சேதம், உயிரிழப்பு தெற்கில் சிங்கள-தமிழ் மக்களிடையே முறுகல் நிலையை ஏற்படுத்தியுள்ளதுடன் இராணுவத் தளபதிகளிடமும் ஆளும் கட்சி அரசியல் வாதிகளிடமும் மக்களிற்கு ஒரு வித சீற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

பூநகரி விவகாரத்திற்கு யார் மீதாவது பொறுப்பு விழவேண்டும் என பலர் விரும்புகின்றனர் ஆனால் யாரும் பதவி விலகமாட்டார்கள் என்பதை பழைய அனுபவங்கள் காட்டுகின்றன. என பி.பி.ஸி மேலும் தெரிவித்தது.

நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி உட்படசுமார் ஐந்து லட்சம் ரூபாவுக்கான கொடுப்பனவுகளை இச் சங்கத்தின் நிர்வாகம் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### மிதிவெடியில் சிக்கி காலை இழந்தார்

பூநகரிப் பகுதியில் தனது வீட்டைப் பார்க்கச் சென்ற ஒருவர் மிதிவெடியில் சிக்கிக் காலை இழந்துள்ளார். கடந்த 16-ம் திகதியன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஆறுமுகம் தாசன் என்பவரே பள்ளிக்குடாப் பகுதியில் கயாமடைந்தவராவார்.

### மன்னார்

விழா சிறப்புற நடைபெறுகிறது. அனைத்து வீதிகளும் சிவப்பு, மஞ்சள் நிற வர்ணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளதுடன் மாவீரர்களை சித்தரிக்கும் சிகரங்களும் காட்சியளிக்கின்றன. அத்துடன் மக்கள் தொடர்ந்தும் சிரமதானப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றதை அவதானிக்க கூடியதாகவுள்ளது.

### ஐ. ஐ. தே. மு.

மேற்கொண்டதை எதிர்த்து இவர் தனது பதவியைஇராஜினாமா செய்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

தோறும் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு காணப்படுவதுடன் மாவீரர்கள் நினைவாக விடுதலைக் கீதங்களும் இரவு பகலாக இசைக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணம் ஆரியகுளம், சங்கானைமண்டிகைக்குளம், கந்தரோடை ஆகிய பகுதிகளில் உள்ள குளங்களில் வர்ண தெப்பங்கள் மிதந்துகொண்டிருப்பதை காணக்கூடியதாக பார்வையிட்டுச் செல்கின்றனர்.

கந்தரோடையில் அலங்கரிக்கப்பட்ட கப்பல் ஒன்றில் கடலில் காவியம் படைத்த மாவீரர்களின் உருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளதுடன் தீபங்களும் ஏற்றப்பட்டுள்ளன இது பெரும்பாலானோரின் கவனத்தையும் ஈர்த்துக்கொண்டிருக்கிறது

(9,11,41)

### புலனாய்வு

என்ன? இவ்வாறான தாக்குதலொன்றுக்கு முகம் கொடுக்கக்கூடிய வகையில் அவசரத்திட்டம் ஏதாவது தயார்படுத்தப்பட்டிருந்ததா? என்பது குறித்து விசாரணைக்குழு விசாரிக்கும்.

இராணுவ புலனாய்வுப் பணிப்பாளரினால் பூநகரி தாக்குதலுக்கு முன்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள பாதுகாப்புப்படை தலைமை அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை? பூநகரி முகாம் மீதான பிரதான தாக்குதலுக்கு பலமணி நேரத்திற்கு முன்னரே படையினரின் பாதுகாப்பு அரண்களினுள் புகுவதில் புலிகள் வெற்றிகண்டனரா என்பது பற்றியும் ஆராயப்படும்.

இதில் அவர்கள் வெற்றி கண்டிருந்தால் பாதுகாப்பு அரண்களில் காவல் செய்யப்படாத இடைவெளிகள் இருந்தது என்பதையே அது எடுத்துக் காட்டுகிறது.

பூநகரியில் தற்போது 1500 படையினர் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பூநகரிமீதான புலிகளின் தாக்குதலினால் இராணுவத்திற்கும், கடற்படைக்கும் பெரும் சேதம் ஏற்பட்டது.

நாகதேவன்துறை கடற்படை முகாம், பூநகரி முகாம் ஆகியவை மீது தரை, நீர்மார்க்கமாக ஒரே சமயத்தில் தாக்குதல் நடந்த விதம் குறித்து சிறிலங்கா பிரதமர் அறிக்கையில் விபரித்துள்ளார்.

தாக்குதலை நடத்துவதற்கு முன்பே இராணுவ பாதுகாப்பு எல்லைகளை புலிகள் ஊடுருவிச்சென்றதாக நம்பப்படுகிறது. பீரங்கி, கவசப் படைகள் நிலைகொண்டிருந்த பகுதிகள் தாக்கி சேதப்படுத்தப்பட்டது. இதன் விளைவாக நாகதேவன்துறை முற்றாக தாக்குதலுக்குள்ளானது அங்குள்ள கடற்படை வள்ளங்கள் சேதப்படுத்தப்பட்டன. அல்லது புலிகளால் எடுத்துச்செல்லப்பட்டது என்றும் பிரதமர் தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

---

# தீவக கோட்ட கூட்டுறவாளர்கள் நடாத்தும் மாவீரர் தின விழா

## 1993 நவம்பர் 27

காலம்: 25-11-1993-ம்திகதி வியாழக்கிழமை காலை 10மணி

இடம்: யாழ். இந்துக்கல்லூரி (குமாரசாமி மண்டபம்)

புங்குடுதீவு - நயினாதீவு, வேலணை, ஊர்காவற்றுறை பலநோ.கூ. சங்கங்களுடன் இணைந்து தீவகக் கூட்டுறவாளர்கள் நடாத்தும் மாவீரர் தின விழா தீவக கோட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவர் திரு.ப. கனகலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது. இவ்விழாவில் அனைத்துச் சங்கங்களின் அங்கத்தவர்கள், பொதுச்சபைப் பிரதிநிதிகள், நெறியாளர்கள், கூட்டுறவாளர்கள், பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்து மாவீரர்களை நினைவு கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

தீவக கோட்ட கூட்டுறவு ஒன்றியம்
தீவக கோட்டம்.

(சி-7989)

---

## 45-ம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு: | வீரச்சாவு: |
|---|---|
| 23 | 12 |
| - | - |
| 03 | 10 |
| - | - |
| 1978 | 1993 |



### 2-ம் லெப். காந்தன்

(தர்மகுலசிங்கம் பிரதீபன் / திரு)

இன்று 25-11-93 இல் எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர், உற்றார், உறவினர்.
மாசார், பளை. (6699)